# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 30 வெள்ளிக்கிழமை (12-05-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:143


## உடனடி யுத்தநிறுத்தத்தை கோருகிறார் யாழ். ஆயர்!

யாழ்ப்பாணம்,மே12

உடனடியாக யுத்தநிறுத்தம் ஒன்றைச் செய்து, அமைதித் தீர்வுக்கான பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி அரசையும் விடுதலைப்புலிகளையும் வலியுறுத்திக் கேட்டிருக்கின்றார் யாழ்.ஆயா வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.

தற்போதைய நிலைமை குறித்து அவர் நேற்றுத் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

கடந்த சில மாதங்களாகவே குடாநாட்டில் போர் தொடர்கிறது. இப்போது அது ஓர் உச்ச நிலைக்கு வந்துவிட்டது என்றுதான் கருதுகிறேன்.

தொலைபேசித் தொடர்புகள் அறுந்துவிட்டன; போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது; குடாநாட்டுக்கு வெளியே போவதற்கு விமானமோ, கப்பலோ இல்ல. உணவோ வேறு அத்தியாவசியப் பொருள்களையோ தருவிப்பது நிறுத்தப்பட்டுள்ளது. பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஒருபுறம். விலையேற்றம், 'பதுக்கல் வியாபாரிகளின் அச்சுறுத்தல் இன்னொருபுறம். மண்எண்ணை, பெற்றோல் ஆகிய வற்றுக்குச் செயற்கைத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 2ஆம் நாளாக ஊரடங்கு தொடர்ந்தும் அமுலில்!

யாழ்ப்பாணம்,மே12

யாழ்.மாநகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்னதினம் காலை 6 மணிக்கு அமுலுக்கு கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றும் தொடர்ந்து நடைமுறையில் இருந்தது.

இந்த ஊரடங்குச்சட்டம் பெரும்பாலும் இன்றும் தொடர்ந்து அமுலில் இருக்கக்கூடும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஊரடங்கு காரணமாக நகரின் சகல சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

யாழ்.மாநகரசபைப் பிரதேசத்துக்கு வெளியே பாடசாலைகள். அரச அலுவலகங்கள் ஓரளவு இயங்கின. கடைகளும் திறந்திருந்தன.

(உ-3)

# அரியாலை, கொழும்புத்துறையில் ஊடுருவியுள்ள புலிகளுடன் மோதல்!

## இரு தரப்பும் நேருக்குநேர் சமர்

யாழ்ப்பாணம்,மே12

**யாழ். குடாநாட்டின் தென்கரையோரப்பகுதி வழியாக நகர்ந்து நேற்று முன்தினம் அதிகாலை அரியாலையிலுள்ள இராணுவத்தினரின் காவலரண்களை ஊடறுத்து முன்னேறிய விடுதலைப் புலிகளுக்கும் அரசுத் துருப்புக்களுக்குமிடையில் நாவற்குழி, அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் நேற்று முழுநாளும் நேருக்குநேர் மோதல்கள் இடம்பெற்றன.**

இரு தரப்பும் மாறி மாறி ஷெல், பீரங்கித் தாக்குதல்களில் ஈடுபட்டன. சரமாரியாக வேட்டுக்களும் தீர்க்கப்பட்ட வண்ணம் இருந்தன.

படைத்தரப்புக்கு உதவியாக கிபிர் விமானங்களும். இராட்சதக் ஹெலிகளும் தாக்குதல்களில் ஈடுபட்டன.

நாவற்குழிப் பாலத்தை தாங்கள் தக்கவைத்திருப்பதாகவும் -

அதை நோக்கி முன்னேற விடுதலைப்புலிகள் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் -

அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

நாவற்குழிக்கு ஒரு கிலோ மீற்றர் தொலைவில் புலிகளின் சிறிய அணி ஒன்று நிலை கொண்டிருப்பதாகவும் -

அப்பகுதிக்கு மேலதிக அணிகளை அனுப்புவதற்கு புலிகள் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் கூட அரசுத் தரப்புக் கூறுகின்றது.

தனங்களப்பு, அரியாலைப்பகுதிகளில் நடைபெற்ற சண்டைகளில் இரு அதிகாரிகள் உட்பட 31 படையினர் கொல்லப்பட்டதாகவும்-

தனங்களப்புப் பகுதியில் 17 புலிகள் கொல்லப்பட்டனர் என்றும்-

அரியாலைப் பகுதியில் புலிகளின் ஐம்பது சடலங்கள் காணப்பட்டன என்றும் -

அரசு மேலும் தெரிவித்தது.

அரியாலை முதல் நாவற்குழி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பள்ளிமுனையில் கிளைமோர் தாக்குதல்

கொழும்பு,மே12

மன்னார், பள்ளிமுனைப் பகுதியில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் குண்டுத் தாக்குதலில் ஐந்து பொலீஸார் காயமடைந்தனர்.

அவர்களில் மூவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் மன்னார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பள்ளிமுனைக்கு அண்மையில் உள்ள கிராமம் ஒன்று படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு அந்தக் கிராமத்தைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.(உ-8)

## குடாநாடு புலிகளிடம் வீழ்ந்தாலும் இந்திய அரசின் நிலைப்பாடு மாறாது

### பிரதமர் வாஜ்பாய் கூறுகிறார்

புதுடில்லி,மே12

யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் பிடியில் சிக்கினாலும் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடாது என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று நாடாளுமன்றக் கூட்டத்தில் வைத்து செய்தியாளர்களுடன் உரையாடியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைப் பிரச்சினையில் அந்த நாட்டு அரசும் விடுதலைப் புலிகளும் வலியுறுத்தினால்தான் இந்தியா அதில் தலையிட முடியும்.

யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளிடம் சிக்கினாலும் கூட இந்திய அரசின் நிலையில் மாற்றமிருக்காது.

ஒருவேளை யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் வசம் வீழ்ந்தாலும் கூட இலங்கை அரசின் பிடியிலிருந்து அது நழுவுவது இது முதல் தடவையாக இருக்காது.

தமிழீழத்தை இந்தியா அங்கீகரிக்காது

யாழ்ப்பாண தீபகற்பத்தில் நிலைமை மோசமாக இருக்கிறது - என்றார்.

இலங்கைக்கு வேறு சில நாடுகளிலிருந்து ஆயுதங்கள் கிடைத்து வருவதாகவெளியான செய்திகளை ஏற்றுக் கொண்ட அவர் அந்த நாடுகளின் பெயர்களை மட்டும் குறிப்பிடவில்லை.

"இந்த ஆயுதங்கள் பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படுகின்றனவா?" - என்று செய்தியாளர்கள் கேட்ட போது "பல்வேறு நாடுகளிலிருந்து ஆயுதங்கள் செல்கின்றன" என்று மட்டும் அவர் கூறினார். (உ-3-5-8)

## யுத்தத்துக்கு மேலும் ரூ 1,200 கோடி நிதி!

### திரட்டப்படுவதாகக் கூறுகிறார் பீரிஸ்

கொழும்பு,மே12

யுத்தத்தை நடத்துவதற்கு மேலும் ஆயிரத்து 200 கோடி ரூபா திரட்டப்படவிருக்கின்றது என்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

பணவீக்கத்தை ஏற்படுத்தாத வகையில் இந்த நிதி திரட்டப்படவிருப்பதாக அவர் சொன்னார்.

அபிவிருத்தித் திட்டங்களை மட்டுப்படுத்துவதன் மூலம் அறுநூறு கோடி ரூபாவும் -

தேசிய பாதுகாப்பு வரியை ஒரு சத வீதத்தால் அதிகரிப்பதன் மூலம் நூற்று ஐம்பது கோடி ரூபாவும் -

சிகரெட், மதுபான வகைகளின் விலையை உயர்த்துவதன் மூலம் 150 கோடி ரூபாவும் -

திரட்டப்படவிருப்பதாக அமைச்சர் மேலும் சொன்னார்.

(உ-3)

## புலிகளைப் பேச்சுக்குக் கூட்டிவரும் எவரின் உதவியையும் அரசு ஏற்கும்

கொழும்பு,மே12

விடுதலைப்புலிகளை எந்த ஒரு நாடும் பேச்சுமேசைக்குக் கொண்டு வருமாயின் அதற்கு அரசு எதிர்ப்புத் தெரிவிக்காது என்று பிரதி வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்துக்கு மத்தியஸ்தம் செய்ய இந்தியா முன்வந்தபோதும் -

இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுக்காததற்கான காரணத்தை விளக்குமாறு கோரி ஐ.தே.கட்சி நாடாளுமன்றத்தில் நேற்றுக் கொண்டுவந்த கவனஈர்ப்பு பிரேரணை மீதான விவாதத்துக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் ஆட்சியிலிருந்த அனைத்து அரசாங்கங்களும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்திருந்தபோதும் விடுதலைப் புலிகள் எந்தச் சந்தர்ப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலந்தைக்குளம் பகுதியில் இருவர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம்,மே12

யுத்தம் தீவிரமாக நடை பெறும் அரியாலை மற்றும் கொழும்புத்துறைப் பகுதியை அண்டிய இலந்தைக்குளம் பிள்ளையார் கோயில் பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் தந்தையும் மகனுமாக இருவர் சீருடையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாகத் தகவல் ஒன்று தெரிவித்தது.

ஆட்டுக்குக் குழை ஒடித்துக் கொண்டிருந்த நிரோஷன் என்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவனும் அவரது தந்தையாரான குணரட்ணம் என்பவருமே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரியாலை பொன்னம்பலம் வீதிப் பகுதியில் ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகி உயிரிழந்த இரண்டு பொது மக்களின் சடலங்கள் கிடக்கக் காணப்படுவதாக மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

### நாளையும் உதயனே!

தற்போதைய யுத்த நெருக்கடி மற்றும் ஊரடங்கு காரணமாக "உதயன்" இன்று நான்கு பக்கங்களுடன் மட்டுமே வெளிவருகின்றது. இதே காரணங்களுக்காக நாளையும் சஞ்சீவிக்குப் பதிலாக உதயனே வெளியாகும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*- நிர்வாகம் -*

### தனங்களப்பில் கடுஞ் சண்டை

யாழ்ப்பாணம்,மே12

தனங்களப்பு, கோயிலாக்கண்டி பகுதிகளில் நேற்றுப் பகல் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படையினருக்கும் இடையில் கடுஞ் சண்டை நடந்ததாக தெரியவந்தது. எனினும் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

நாகர்கோயில் பக்கத்திலும் நேற்று முன்னிரவில் குண்டுச் சத்தங்கள் கேட்டன. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

இறைச்சிக் கோழி விற்பனைக் குண்டு. நாதன் கூல்பார், சங்கத்தானை, சாவகச்சேரி. (76087)

### ராகவேந்திர சோதிடம்

ஆண், பெண் திருமணத் தடங்கல், குழந்தைச் செல்வம் இன்மை, வெளிநாடு, கல்வி, வியாபாரம், தொழில், தீராத நோய் இன்னும் பலவற்றுக்கு இருக்கும் தடைகள், குறைகளுக்கு ஜாதகரீதியாக சாந்திகள், பரிகாரங்கள் பெற்றுக் கொள்ளலாம். ராகவேந்திர மிருத்திக்கா, 159A, கோயில் வீதி, நல்லூர். (75967)

### பெண் உதவியாளர் தேவை

மூவர் கொண்ட குடும்பத்துக்கு சமையல் வேலை செய்யக்கூடிய பெண் உதவியாளர் தேவை. பெண் 40தொடக்கம் 50வயதுக்குட்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது. தங்குமிடவசதி, சாப்பாடு, நல்ல சம்பளம் யாவும் வழங்கப்படும். குடும்பப் பொறுப்புக்கள் இல்லாதவராக இருத்தல் நன்று. தொடர்பு:- விளம்பர இல. 1055, மே/பா. உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (76142)


# யாழ்.சிறையில் குழப்பத்தை அடக்க ராணுவம் அழைப்பு

யாழ்ப்பாணம்,மே12

யாழ் பிரதான வீதியில் உள்ள சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் குழப்பத்திலஈடுபட்டதை அடுத்து சிறைக்குள் இராணுவம் அழைக்கப்பட்டது.

இராணுவத்தினர் மேல்நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததை அடுத்து நிலமை கட்டப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக சிறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கைதிகள் குழப்பத்தில் ஈடுபட்டதற்கான காரணம் தெளிவாக தெரியவரவில்லை.

யாழ் சிறையில் தற்போது 89 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

"கைதிகளதொடர்ந்து தொல்லை தந்தால் யாழ் சிறையில் இருந்து பாதுகாப்பான வேறு சிறைகளுக்கு அவர்களை மாற்றும்படி கோருவதைத் தவிர வேறு வழியில்லை" - என்று சிறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ)

# இலங்கையில் வெளித்தலையீடு: எதிர்ப்புத் தெரிவிக்கிறது சீனா!

கொழும்பு,மே12

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் எந்த ஒரு வெளித்தலையீட்டையும் தான் எதிர்பார்ப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் போர் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ள சீனா, இலங்கையர்கள் தாமாகவே இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளது.

அதேவேளை -

இலங்கையரசு சீனாவிடம் இராணுவ உதவி உட்பட ஏனைய உதவிகளைக் கோரியுள்ளதா எனக் கேட்டதற்கு சீனப் பேச்சாளர் எதுவிதமான கருத்தையும் தெரிவிக்கவில்லை. (உ-8)

அவசரகால விதிகள் குறித்து

# ரத்வத்தையுடன் பேச ஐ.தே.க. குழு அமைப்பு

கொழும்பு,மே12

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைத் தொடர்ந்து அரசு அமுல்படுத்தியுள்ள புதிய அவசரகாலச் சட்டங்கள் தொடர்பாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையுடன் பேச்சு நடத்துவதற்கு ஐ.தே. கட்சி குழு ஒன்றை அமைத்துள்ளது.

இந்தக் குழுவில் கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோறள மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் லொக்கு பண்டார ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விதிகளின் 8ஆம், 19ஆம், 25ஆம், 36ஆம், 38ஆம், 41ஆம் சரத்துக்களை நிறுத்திவைக்கவும், 12ஆம், 14ஆம் சரத்துக்கள் தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தவும் அனுருத்த ரத்வத்தை ஒப்புக்கொண்டமைக்கு அமைய இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. (உ-8)

# மத்தியஸ்தம் வகிக்க இந்தியாவை அழைக்கக் கோருகின்றது ஐ.தே.க.

## நாடாளுமன்றுக்கு பிரேரணை சமர்ப்பிக்க முஸ்தீபு

கொழும்பு,மே12

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மத்தியஸ்தம் வகிக்க இந்தியா தெரிவித்துள்ள விருப்பத்தை ஏற்று அதற்கான உத்தியோகபூர்வ அழைப்பை இந்தியாவுக்கு இலங்கை விடுக்கவேண்டும்.

மேற்கண்டவாறு அரசாங்கத்தைக் கோரும் பிரேரணை ஒன்றை ஐ.தே.கட்சி நாடாளுமன்றத்தில் கொண்டுவரவிருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மத்தியஸ்தம் வகிக்குமாறு இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் கோரும்பட்சத்தில் அதை ஏற்று அந்தப் பணியை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் அறிவித்துள்ளார்.

இந்தியாவின் இந்த விருப்பத்தை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க வரவேற்றிருந்தார்

எனினும் இலங்கை அரசு எந்த வித கருத்தையும் வெளியிடவில்லை.

இதைத் தொடர்ந்து ஐ.தே.கட்சி நாடாளுமன்றத்தில் மேற்கண்ட பிரேரணையைக் கொண்டுவரவிருக்கின்றது. (உ-3)

## ஒத்திவைப்பு!

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் இன்று தொடக்கம் மூன்று தினங்கள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஏற்பாடாகியிருந்த தமிழ்த் தினப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அந்தவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.ஆர்.டேவிட் அறிவித்துள்ளார். (உ-3)

* * *

உரும்பராய் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றம் நாளை சனிக்கிழமை ஏற்பாடு செய்திருந்த ஒன்றுகூடல் நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் நாளை சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் ஏற்பாடாகியிருந்த கண்ணிவெடி விழிப்புணர்வு நாடகப் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

* * *

வண்ணார்பண்ணை வடமேற்கு சமுர்த்தி செயலணிக்குழு ஆறுகால்மடம் வயித்திலிங்கம் வித்தியாசாலையில் இன்று மாலை 4 மணிக்கு ஏற்பாடு செய்திருந்த வறுமை ஒழிப்பு பற்றிய கலந்துரையாடலும், செயலணிக்குழுத் தெரிவும் தற்போதைய சூழ்நிலை காரணமாக மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளது என்று வண்.வடமேற்கு சமுர்த்தி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (உ-8)

புலிகளின் யாழ் நோக்கிய

# தாக்குதல் செய்திகளுக்கு இந்தியாவில் முக்கி இடம்

## பல பத்திரிகைகளில் தலைப்புச் செய்தி

புதுடில்லி,மே12

யாழ்.நகரை இலக்குவைத்து விடுதலைப் புலிகள் நடத்தும் தாக்குதலகள் தொடர்பான செய்திகள் நேற்றைய இந்தியப் பத்திரிகைகளில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன.

பெரும்பாலான பத்திரிகைகளில் இந்தத் தாக்குதல்கள் குறித்த தகவல்களே தலைப்புச் செய்தியாகப் பிரசுரமாகி இருந்தன.

யாழ்.நோக்கிய புலிகளின் தாக்குதல்கள் தொடர்பான வரைபடங்களும் அந்தப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தன.

'இந்து', 'பயணியர்', இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆகிய பத்திரிகைகள் இலங்கை விவகாரம் தொடர்பான விசேட கட்டுரைகளையும் வெளியிட்டிருந்தன. (உ-3)

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம்,மே12

புத்தூர் கிழக்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு புத்தூர் கிழக்கு விக்னேஸ்வரா சவாரித்திட்லில் நடை

ஈ.பி.ஆர்.எல்.எவ். வழக்கு

# சுரேஷ் அணியின் ஐவர் மீதான இடைக்கால தடை நீக்கம்

கொழும்பு,மே12

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான மத்திய குழு உறுப்பினர்கள் ஐவரின் செயற்பாடுகளின் மீதான இடைக்கால தடையினை நீக்குமாறு கடந்த 9ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிவான் சித்ரஸ்ரீ உத்தரவிட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தாக்கல் செய்திருந்த வழக்கு ஒன்றின் அடிப்படையில் சுரேஷ் அணியைச்சேர்ந்த குணராஜசிங்கம் விக்னேஸ்வரன், கதிரிப்பிள்ளை அருந்தவராஜா, நடேசு சிவசக்தி ஆனந்தன்,குமரேஸ் என அழைக்கப்படும் சம்பூர்ணம் ரட்ணசிங்கம், சின்னபாலா என அழைக்கப்படும் கந்தசாமி நடராஜாக் குருக்கள் ஆகியோரின் கட்சி தொடர்பான செயற்பாடுகளின் மீது விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத்தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட அமைப்பின் ஏனைய உறுப்பினர்களின் செயற்பாடுகளின் மீதான இடைக்காலத் தடையை நீக்குவது தொடர்பாகப் பரிசீலனை செய்வதற்காக வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ-8)

## மீசாலையில் கொள்ளை

மீசாலை வடக்கு சோலையம்மன் கோயில் பகுதியில் கடந்த புதன் இரவு இரண்டு வீடுகளில் தனித்தனியாக வசித்த இருவர் கொட்டன்களால் தாக்கப்பட்டு அவர்களின் வீடுகளில் இருந்த நகைகள் மற்றும் பொருள்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டன.

இனந்தெரியாத இருவர் இவ்வாறு தமது கைவரிசையை காட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான தேவராஜா மகேஸ்வரி (வயது48) கால் முறிந்த நிலையிலும் சிவசுப்பிரமணியும் (வயது47) தலையில் காயங்களுடனும் [illegible] மதிக்கப்பட்டுள்ளனர் (உ-109)


# 47ஆவது பிறந்த நாளில் விண்ணேகிய 227ஆவது நாளில் நினைந்திருக்கின்றோம்

பிறப்பு 1953 - 05 - 12



இறப்பு 1999 - 09 - 28

## அமரர் அம்பலவாணர் சோதிலிங்கம்

[பிரபல வெற்றிலை வியாபாரி (சோதி), உரிமையாளர், கஜமுக ஸ்ரோர்ஸ்]

ஊருக்கு ஒளியீந்த சோதி நிலாவே
யாருக்கும் நன்மை செய்த நாயகனே
பாருக்கு பண்பு சொன்ன அப்பாவே
சீருக்குச் சிரித்து நின்ற செய் தவமே
எங்குற் றீர் என்று தேடுகிறோம்
தங்கம் பதித்த முகத்தைக் காணவில்லை
பொங்கும் சிரிப்பு பொலியவில்லை – நாம்
அங்கம் நொந்திங்கு அலறுகிறோம்
அன்பான அப்பாவே உங்கள் அன்பு முகத்தை
எந்த ஜென்மத்தில் காண்போம் அப்பா?
ஒரு கணப் பொழுதில் எம்மை ஆழாத்துயரில்
ஆழ்த்தி மீளாப் பயணம் சென்றதேனோ?
மரிப்பதுதான் எல்லோரும் மரணம் என்றால்
இப்படியோ இருப்பவரை ஏங்க வைத்து எங்கு
சென்றீர்கள் அப்பா? உங்கள் திருமுகம் கண்டு
227 நாள்கள் அப்பா!
அறிவுரைகள் பல சொல்லி எம்மை பாசத்துடன்
வளர்த்து எடுத்த அப்பாவே! எங்களை
தவிக்க விட்டு ஏன் அப்பா சென்றீர்கள்?
அப்பா யாருமற்ற அநாதையாகத் துடிக்கின்றோம்
நீங்கள் பெற்ற பிள்ளைகளின் துயர் தீர்க்க ஓடோடி
வாருங்கள் அப்பா
ஆசை அப்பாவே இல்லற வாழ்வில் நீங்கள் அகவை
இருபத்தைந்து ஆவணியில் கண்டு மகிழவும்
ஆண்டவன் விட்டு வைக்கவில்லையே
உற்ற மனையாளும் பெற்ற பிள்ளைகளும்
நாதியற்ற பிணங்களாய் இருப்பதை காண்பீர்களா
உங்கள் ஆத்மா சாந்தியடைய 47ஆவது பிறந்த
நாளில் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்களின் நினைவால் துயருறும்,
மனைவி. பிள்ளைகள்.

இல.33, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(76143)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1956 - 09 - 05



மறைவு 1999 - 05 - 23

## திதி: 12-05-2000

## திருமதி சறோஜா பாலசுந்தரம்

ஆண்டு ஒன்று போனாலும் எம் மனதில் உம் நினைவுகள் என்றும் நிற்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

தகவல்:
து.பாலசுந்தரம்,
நாவற்குழி,
கைதடி.

(76128)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் வேலை நிறுத்தத்தால் மாநிலங்களில் பணிகள் ஸ்தம்பிதம்

புதுடில்லி,மே12

இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கையைக் கண்டித்து இடதுசாரித் தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்த வேலை நிறுத்தம் காரணமாக நேற்று இந்தியாவின் மாநிலங்களில் பணிகள் ஸ்தம்பித்தன.

இடதுசாரிகளின் கை ஓங்கியுள்ள மேற்குவங்கம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் முழு அளவில் வேலைநிறுத்தம் இடம்பெற்றதால் போக்குவரத்து மற்றும் சகல சேவைகளும் ஸ்தம்பித்தன.

அந்த மாநிலங்களில் ரயில்களை மறித்து மறியல் போராட்டங்கள் இடம்பெற்றன. நீண்ட தூர பஸ் சேவைகளும் இடம்பெறவில்லை. இந்திய ஏயர் லைன்ஸ் சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டிருந்தன.

புதுடில்லியில் வர்த்தக நிறுவனங்களுக்கு முன்பாக மறியல் போராட்டங்கள் இடம்பெற்றன.

ஆர்ப்பாட்டங்களும், கல்வீச்சுக்களும் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் வேலை நிறுத்தம் இடம்பெற்ற போதும் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவில், வேலை நிறுத்தம் காரணமாக பெரும்பாலான மாநிலங்களின் பணிகள் ஸ்தம்பித்திருந்தன.

# சியராலியோனின் முக்கிய நகர் மீண்டும் அரசுப் படைகள் வசம்

பிரீரவுன்,மே12

சியராலியோனின் தலைநகர் பிரீரவுனுக்கு கிழக்கே 65 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மஜியக்கா நகரை மீண்டும் கைப்பற்றிவிட்டதாக அரச ஆதரவு படையினர் கூறியுள்ளனர்.

தீவிரவாதிகளுடன் இடம்பெற்ற பல மணிநேர சண்டையை அடுத்தே அந்நகர் கைப்பற்றப்பட்டதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

இச்சண்டையில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் -

தீவிரவாதிகள் தமது தாக்குதல்களை கடுமையாக்கி முன்னேறும் நிலையில் உள்ளதால் -

கிராமப்புறங்களில் இருந்து மக்கள் சாரிசாரியாக பிரீரவுனை நோக்கி இடம்பெயர்ந்த வண்ணம் உள்ளதாகக் கூறப்பட்டது. (உ-3)

# தமிழகத்தில் 1,000 பேர் கைது!

சென்னை,மே12

இந்தியாவில் நாடளாவிய ரீதியில் நேற்று நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் தமிழகத்தில் ரயில்வே மற்றும் பஸ் மறியல் போராட்டங்களில் ஈடுபட முயன்ற ஆயிரத்து 194 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சைதாப்பேட்டையில் ரயில் மறியலில் ஈடுபட முயன்ற இந்திய ஜனநாயக இளைஞர் சங்கத்தைச்சேர்ந்த எழுநூறு பேர், சென்னை மத்திய ரயில் நிலையம் அருகே பஸ் மறியல் போராட்டம் செய்யமுயன்ற கம்யூனிஸ் தொழிற்சங்கத்தினர் இறுநூறு பேர், காந்திபுரம் மற்றும் திரம்பூர் ரயில்வே நிலையங்களில் மறியலில் ஈடுபடச் சென்ற 294 பேர் ஆகியோரே பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

## உலக அரங்கில்

# இலங்கையின் உள் பிரச்சினையில் இந்திய தலையீடு தேவையற்றது

### சிவசேனைத் தலைவர் பால் தக்கரே கூறுகின்றார்

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் தலையீட்டை அனுமதிப்பதில்லை என்பதில் எமது கட்சியும், மத்திய அரசும் மிக உறுதியாக உள்ளன.

- இவ்வாறு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலர் வை.கோபாலசாமியுடன் விரிவாகப் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தபோது சிவசேனைக் கட்சித் தலைவர் பால் தாக்ரே தெரிவித்தார்.

மகாராஷ்டிரத்தில் மிகவும் சக்திவாய்ந்த அரசியல் தலைவரான



பால் தாக்ரே நீண்ட காலமாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான போக்கைக் கடைப்பிடித்து வருபவர்.

அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது:-

"இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படவேண்டும்.

"இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா மூக்கை நுழைப்பது நேருவின் பஞ்சசீலக் கொள்கைக்கு எதிரானது.

"விடுதலைப் புலிகளும் எமது மக்களே. அவர்களுக்கு எதிராகப் போரிட இந்தியப் படையை அனுப்பத்தேவையில்லை.

"ராஜீவ் காந்தி அவ்வாறான தவறான செயலைப் புரிந்ததால் அதற்கு விலையாகத் தன் உயிரையே அவர் கொடுக்க வேண்டி நேர்ந்தது - என்றார். (உ-8)

# இஸ்ரேல் - பலஸ்தீன பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டதாக அறிவிப்பு

மத்திய கிழக்குப் பிரச்சினையில் சமாதானத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் மூன்று பிரதான காரணிகளான ஜெருசலேமின் இறைமை, யூதக்குடியேற்றம் மற்றும் அகதிகளின் நிலை ஆகியன தொடர்பாக இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் ஓரளவு இணக்கம் ஏற்பட்டிருக்கின்றது.

பேச்சுகள் பற்றிய எவ்வித தகவல்களையும் இரு தரப்பினரும் வெளியிடாத போதிலும் -

முக்கிய வட்டாரங்களின் கருத்துப்படி சமாதான ஒப்பந்தத்துக்கான - காத்திரமான - பேச்சுக்களில் இஸ்ரேலியப் பிரதமர் எகிட் பராக்கும், பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்தும் ஈடுபட்டனர் என தெரிவிக்கப்பட்டது.

இருவருக்கும் இடையில் மிக ஆழமாக இடம்பெற்ற இந்தப் பேச்சுக்கள் இரு தரப்புக்கும் இடையில் இணக்க நிலை எட்டும் சாத்தியத்தை ஏற்படுத்தியுள்ளன எனவும் சுட்டிக் காட்டப்பட்டது. (உ-3)

# இந்திய சனத்தொகை நூறு கோடியாகியது

புதுடில்லி,மே12

இந்தியாவின் சனத்தொகை நூறு கோடியாகியது.

நேற்று நண்பகல் பிறந்த குழந்தையுடன் சனத்தொகை நூறு கோடியாகிவிட்டது என்று அரச அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

சனத்தொகையைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுப்பதென அரசு முடிவு செய்துள்ளது.

# இந்தியாவின் உளவு அமைப்பை புனரமைக்க 4 குழுக்கள் நியமனம்

புதுடில்லி,மே12

இந்தியாவின் உளவுத் தகவல் தொடர்பு அமைப்பு முறையை முன்னேற்றும் வகையில் -

இது தொடர்பான பிரச்சினைகளை ஆராய நான்கு குழுக்களை மத்திய அரசு நியமித்துள்ளது.

இந்தியாவின் பாதுகாப்பு நிர்வாகம் குறித்து உளவு விசாரணை அமைப்பு மட்டுமன்றி இந்தக் குழுக்களும் ஆலோசனை நடத்தும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தங்களது பரிந்துரைகளை மூன்று மாதத்துக்குள் சமர்ப்பிக்குமாறு இந்தக் குழுக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பைக் கண்காணிப்பதற்காக உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி தலைமையில் அமைக்கப்பட்ட இந்தக் குழுக்கள் உள்நாட்டு பாதுகாப்பு, எல்லை நிர்வாகம், என்பவற்றையும் கண்காணிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-8)

# ஈழத்தமிழருக்கு ஆதரவாக சென்னையில் பேரணி!

சென்னை,மே12

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து எதிர்வரும் 20ஆம் திகதி மாபெரும் பேரணி ஒன்று சென்னையில் நடைபெறவிருக்கின்றது.

புதிய தமிழம் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தப் பேரணியில் பல அமைப்புக்கள் பங்குபற்றவிருக்கின்றன.

இந்தப் பேரணிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அந்த அமைப்பின் தலைவர் டாக்டர் கிருஸ்ணசாமி தெரிவித்தார். (உ-3-8)

---

### இலங்கை நெருக்கடிக்குத் தீர்வு:

# இந்தியாவின் தலைமையில் சர்வதேச கூட்டு முயற்சி!

புதுடில்லி,மே12

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண அமெரிக்க, நோர்வே ஆகிய நாடுகளின் உதவியுடன் இந்தியா தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்று 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த முயற்சிகளில் ஆக்கபூர்வமான பலன் கிடைத்துள்ளது என்று தெரிவித்த வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் அவை தொடர்பான விவரங்களை வெளியிட மறுத்துவிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பாகவும்-

இலங்கையின் நிலைமை தொடர்பாகவும் -

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், நோர்வே மற்றும் ஐரோப்பிய சமூக அமைப்பு நாடுகள் அடிக்கடி இந்தியாவுடன் தகவல்களைப் பரிமாறி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் நிலைமையை உன்னிப்பாகத் தாங்கள் கண்காணித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

இலங்கை நெருக்கடி தொடர்பாக இந்தியாவின் சர்வதேச கூட்டு முயற்சி ஒன்றை ஏற்றிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த விவகாரத்திலி அமெரிக்கா முன்னணியில் செயற்படாது. பின்னணியில் இருந்தே செயற்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார் என்று 'இந்து' நாளிதழ் தெரிவித்தது. (உ-3)

# திருச்சி விமான நிலையத்துக்கு தமிழில் அச்சுறுத்தல் கடிதம்

### விமானத்தைக் கடத்தப்போவதாக

சென்னை,மே12

திருச்சியிலிருந்து கொழும்புக்கும், சார்ஜாவுக்கும் செல்லும் விமானங்களைக் கடத்தப்போவதாக அச்சுறுத்தல் கடிதமொன்று அந்த விமான நிலைய அதிகாரிகளுக்கு நேற்றுமுன்தினம் கிடைத்துள்ளது.

அதைத் தொடர்ந்து அந்த விமான நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு விடுதலை அமைப்பு என்ற பெயரில்தமிழகத்தின் முசுறி என்ற இடத்திலிருந்து அனுப்பப்பட்ட இந்தக் கடிதத்தில் அன்பழகன் என்பவர் கையொப்பம் வைத்துள்ளார். இந்தக் கடிதம் தமிழில் எழுதப்பட்டிருந்தது.

இந்த அச்சுறுத்தலுக்கு எதிராக ஏதாவது நடவடிக்கை எடுத்தால் குண்டுவைத்து விமானநிலையத்தைத் தகர்த்துவிடுவோம் என்றும் அந்த அமைப்பு அக்கடிதத்தில் எச்சரித்துள்ளது.

இந்த எச்சரிக்கையை அடுத்து விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிஉச்ச நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக 'இந்து' தகவல் வெளியிட்டுள்ளது. (உ-3)

# வடக்கு இலங்கைக்கு அண்மையில் இந்தியாவின் கடற்பயிற்சி ஒத்திகை

### விமானப்படை - கடலோரக் காவற்படை இணைந்து

சென்னை,மே12

வட இலங்கைக்கு அண்மையில் - இந்தியாவின் தெற்குக் கரையோரப் பகுதியில் இந்திய விமானப் படையும், கரையோரக் காவல்படையும் இணைந்து கடற்படைப் பயிற்சி ஒத்திகை ஒன்றை மேற்கொள்ள இருக்கின்றன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் இந்தப் பயிற்சியை ஏற்பாடு செய்துள்ளமை முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது என்று 'இந்து' நாளேடு தெரிவிக்கிறது.

இலங்கை அகதிகள் வந்திறங்கும் மற்றும் அவர்கள் தங்கியிருக்கும் மண்டபம், தூத்துக்குடி, தனுஷ்கோடி ஆகியவற்றை அண்டிய கடற்பகுதியிலேயே இந்தப் பயிற்சி ஒத்திகையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

# அம்பன் ஆஸ்பத்திரியில் முகாம் அமைப்பு

நெல்லியடி,மே12

வடமராட்சி கிழக்கு அம்பன் ஆஸ்பத்திரிப் பகுதியில் கடந்த திங்களன்று சீருடையினர் முகாமிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமது பொறுப்பில் இருந்த மருந்துப் பொருள்கள் மற்றும் ஆஸ்பத்திரித் தளபாடங்கள் போன்றவை தனது கட்டுப்பாட்டில் இல்லை என்று அம்பன் ஆஸ்பத்திரி [illegible] யோகேஸ்வரதேவர் மாகாண சுகாதார பணிப்பாளருக்கு முறைப்பாடு செய்துள்ளார். (உ-109)

# உதவிக்கு வரும் படையை இலங்கை கூலிப்படையாகவே பயன்படுத்தும்!

### தி.மு.க. அமைச்சர் பாலு கூறுகிறார்

இலங்கைக்கு எந்த நாட்டுப் படை சென்றாலும் அந்தப் படையை கூலிப்படையாகவே இலங்கை பயன்படுத்தும்.

இந்தியப்பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கூட்டிய அனைத்துக்கட்சிகளின் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோது தி.மு.கவைச் சேர்ந்த மத்திய அமைச்சர் ரி.ஆர்.பாலு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

கடந்த சில மாதங்களாக இலங்கை இராணுவத்தில் இருந்து இருபதினாயிரம் இராணுவத்தினர் தப்பிஓடிவிட்டார்கள் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

"விடுதலைப்புலிகளுடன் போராடத் திறனின்றித் தப்பியோடும் இராணுவத்தின் வெற்றிடங்களுக்கே அந்நிய நாட்டுப் படைகள் நிச்சயமாக நிரப்பப்படப் போகின்றன.

"இந்நிலையில் எந்த நாட்டுப் படை இலங்கைக்கு சென்றாலும் அப் படைகளைக் கூலிப் படைகளாகவே இலங்கை பயன்படுத்தப்போகிறது என்பது தெட்டத்தெளிவாகின்றது - என்றார். (உ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகால விதிகளைத் தளர்த்த பிரிட்டிஷ் எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு,மே12

அவசரகாலச் சட்டத்தை தளர்த்தும்படி இலங்கை அரசாங்கத்தைக் கோருமாறு பிரிட்டன் அரசை அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளதாக ஐ.தே. கட்சியின் எம்.பியான ரவி கருணநாயக்க கூறியுள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறுபேர் சமர்ப்பித்துள்ள இந்தப் பிரேரணை பிரிட்டன் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

செய்தித்தணிக்கை, பொதுக் கூட்டங்களுக்கான தடை போன்றவை ஜனநாயகத்தைப் பாதிப்பதால் அவற்றை தளர்த்தவேண்டுமெனவும் அப்பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

நாட்டில் தற்பொழுது பிரகடனப் படுத்தப்பட்டுள்ள சட்டவிதிகள் குறித்து உலக நாடுகள் அனைத்தும் அவதானித்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

(உ-5-8)

## கப்பலில் இருந்து

# பொருள்கள் இறக்கும் பணி பருத்தித்துறையில் பாதிப்பு

வடமராட்சி,மே12

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் பணி நேற்றுமுன்தினம் பாதிக்கப்பட்டது.

பொருள்களை இறக்குவதற்காகப் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்த 'போல்கொட்' கப்பல் பொருள்களை இறக்காமலேயே புறப்பட்டுச் சென்றது.

ஏற்கனவே கப்பலில் இருந்து பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கப்பட்ட பொருள்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி புறப்படவேண்டிய இரண்டு லொறிகள் யாழ்.நகரத்தில் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருப்பதால் பருத்தித்துறை ஓராங்கட்டைச் சந்தியில் செவ்வாய் மாலை முதல் தரித்து நிற்கின்றன.

யாழ்ப்பாணம் குருநகரில் உள்ள உணவுக்களஞ்சியத்தில் இப்பெருள்கள் இறக்கப்பட்டால்தான் இந்த லொறிகளில் புதிதாகப் பொருள்களை ஏற்றமுடியும்.

அதே போல யாழ். நகரில் சிக்கியுள்ள லொறிகளும் பொருள்களை ஏற்றுவதற்காகப் துறைமுகப்பகுதிக்கு வரமுடியாத நிலை உள்ளது.

இக் காரணங்களினாலேயே கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

தற்போது காங்கேசன்துறைக்கு வந்துள்ள குமண கப்பல் அங்கு பொருள்களை இறக்கி வருவதாக தெரியவந்தது.

(உ-109-173)

# நேற்றும் கடும் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம்,மே12

கொழும்புத்துறை, கிழக்கு அரியாலை. சுண்டுக்குழி ஆகிய பகுதிகளை நோக்கி நேற்றும் கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இச்ஷெல்களில் ஒன்று சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்பாக வீழ்ந்து வெடித்ததில் கொழும்புத்துறை சுவாமியார் வீதியைச் சேர்ந்த சுப்பர்லட்சுமி (வயது 50) என்பவர் காயமடைந்தார்.

இதேவேளை கிழக்குஅரியாலை, துண்டிப் பகுதிகளில் ஹெலிக் கொப்டர்களிலிருந்து இரு தடவைகள் தாக்குதல் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதலின் பின்னர் சீ-பிளேன் ஒன்று யாழ்.நகர் உட்பட அரியாலை, கொழும்புத்துறை மற்றும் கரையோரப்பகுதிகளின் மேலாக வட்டமிட்டுச் சென்றிருந்தது.

(உ-5)

## உடனடி யுத்த.....

(முதலாம் ப்க்கத் தொடர்ச்சி)

ளது.

இதற்கிடையில் சாவகச்சேரி முதல் சுண்டுக்குழி வரை இடம்பெயருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. போர் யாழ். நகரை நெருங்கி வரவர மக்கள் இடம்பெயர்வும் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. யாழ். பேராலயப் பகுதியில் அகதிகள் வந்து குவிந்துள்ளனர். தென்மராட்சி - பச்சிலைப்பள்ளிப் பகுதி மக்கள் ஐம்பதாயிரம்பேர் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளனர்.

யுத்தம் தொடருமானால் இடையில் சிக்கி இறக்கவேண்டுமே என்ற அச்சமும், பதற்றமும் மக்களை எங்கே போவது என்ற ஏக்க நிலைக்குத் தள்ளி உள்ளன.

இந்தப் பயங்கர நிலையைப் போக்கவும் உயிர் அழிவுகளைத் தவிர்க்கவும் மிக அவசியமானதும் இன்றியமையாததும் போர் நிறுத்தம் ஒன்றே என வலியுறுத்த விரும்புகின்றேன்.

இதனையே பலரும் கடந்த காலங்களில் வலியுறுத்தி வந்துள்ளனர். இந்நிலையை நன்குணர்ந்து விடுதலைப் புலிகள் இந்த இக்கட்டான நிலையினைத் தவிர்க்க போர் நிறுத்தம் ஒன்றுக்கு அரசுக்கு அழைப்பு விடுத்தார்கள்.

குடாநாட்டிலுள்ள முப்பதாயிரம் துருப்புக்களையும் யாழ். நகரில் ஏற்படக்கூடிய ஓர் யுத்தக்களரியையும் நிரந்தரப் பேச்சுக்களையும் மூன்றாம் தரப்பு உதவியுடன் தீர்வினையும் முன்வைத்து விடுக்கப்பட்ட யுத்த நிறுத்த அழைப்பினை அனைத்துப் புத்திஜீவிகளும் துன்புறும் மக்களும் ஆவலுடன் வரவேற்கின்றனர். ஆனால் அரசோ இதனை நடுநிலைமையோடு சற்றேனும் எடுத்தாராயாமல் அடியோடு நிராகரித்தது வருத்தத்துக்குரியது.

வாபஸ் பெறுவது என்பது தனக்கு கௌரவக் குறைவையும் தோல்வியையும் ஏற்படுத்தும் என்ற வகையில் அரசு இந்த யுத்தநிறுத்தத்தை நிராகரித்திருக்கக்கூடும்.

அரசாங்கம் குடாநாட்டில் இருந்து படையினரை வெளியேற்றும் போது அரச நிர்வாகத்தில் வெற்றிடம் ஏற்படத்தான் போகின்றது.

ஆனால் படையினரின் வாபஸ் வேறு; யுத்தநிறுத்தம் வேறு.

போர் தொடர்வதால் அழிவு இரு பகுதியினருக்குமே ஏற்படப் போகின்றது. அப்பாவிப் பொது மக்கள் பலர் இறக்கப் போகின்றார்கள். இதனைக் கவனத்தில் எடுத்தென்றாலும் இந்த யுத்தநிறுத்த அழைப்புக் குறித்து அரசு மீள் பரிசீலனை செய்யவேண்டும்.

போரை நிறுத்தி அதன் மூலம் பேச்சு நடத்துவதற்குரிய சூழல் ஏற்படுவதை அழிக்கின்ற விதத்தில் யுத்தநிறுத்தத்தை நிராகரித்தமை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல.

கடந்த 70 வருடங்களாக பதவியில் இருந்த அரசுகள் எல்லா தந்திரோபாயங்களையும் பயன்படுத்தியும் இந்த இனப்போருக்கான சுமுகமான - நீதியான - தீர்வினைக் காண முடியவில்லை.

இக்கடைசி நேரத்திலும் வெளிநாடுகளின் இராணுவ மற்றும் உதவிகளுக்காக அரசு கையேந்தி நிற்கிறது. இவர்களின் உதவியை நம்பிப் போரினால் சமாதானத்தை ஏற்படுத்தலாம் என்ற தன் தவறான கொள்கையை நிரூபிக்கப்பார்க்கின்றது. மேலும் போர்க்கால நிலையைப் பிரகடனப்படுத்திப் போரைத் தொடர முடிவெடுத்துள்ளது. இதனால் ஏற்படப்போவது போர் அழிவுகளும் இழப்புக்களுமேயன்றி சுமுகமான ஒரு தீர்வு அல்ல.

அரசுக்கும் புலிகளுக்கும் நல்மனம் படைத்த அனைவருக்கும் இக்கட்டான இவ்வேளையில் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன்.

யுத்தம் வேண்டாம் யுத்தம் வேண்டாம் போர் நிறுத்தத்தை உடனடியாக அறிவித்து செஞ் சிலுவைச் சர்வதேசக் குழுவுடனோ அல்லது ஐ.நா.சார்ந்த அமைப்புக்களின் உதவியுடனோ நேர்மையுடன் போர் நிறுத்தத்தை ஆரம்பித்து அதிலிருந்து நிரந்தர அமைதிப் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு என்பவற்றையும் அடையலாம். இதற்கு வெளிநாடுகளின் உதவியும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமாகப் பெறப்படலாம். அனைத்துக்கும் இப்போது அடிப்படையானது யுத்த நிறுத்தமே என மிகவும் வலியுறுத்துகின்றேன் - என்று தெரிவித்தார்.

(உ-3)

## ரூ 30 ஆயிரம் நஷ்டஈடு

வடமராட்சி,மே12

ஏப்ரல் முட்டாள் தினத்தன்று வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றின் மீது விளையாட்டாக பொதி ஒன்றை வீசி அதன் கண்ணாடியை உடைத்ததாகக் கூறப்படும் மூன்று இளைஞர்களை அந்த பஸ்ஸுக்கு ஏற்பட்ட சேதத்துக்காக முப்பதாயிரம் ரூபாவைச் செலுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் முன்னிலையில் கடந்த புதனன்று இவ்வழக்கு எடுக்கப்பட்டபோது நீதிவான் இந்த உத்தரவை வழங்கினார்.

தொண்டமானாறைச் சேர்ந்த பாடசாலை ஒன்றின் மாணவர்களான அ.சுதாநந்தன் (வயது20), இராஜ்சுதன் (வயது 20), விஜயநந்தன் (வயது 21) ஆகியோரையே எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை அலுவலகத்தில் இப்பணத்தைச் செலுத்தும்படி உத்தரவிட்டு அவர்களை வழக்கிலிருந்து விடுதலை செய்து நீதிவான் தீர்ப்பு வழங்கினார்.

(உ-105)

## உலர் உணவு விநியோகம்

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 79 ஏ.பி.புள்ளிகளுக்குரிய இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணத்தை இன்று முதல் சங்கக் கிளைகள் ஊடாக வழங்க உள்ளது.

(3-73)

## கிளைமோர் தாக்குதல்

தலைமன்னார் கடற்படைத் தளத்துக்கு சென்று பேசாலைக்குத் திரும்பிக் கொண்டிருந்த படையினரின் டிராக்டர் ஒன்று வழியில் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் டிராக்டர் பலத்த சேதத்துக்குள்ளானது.

(உ-3-8)

## நோயாளர்கள் வெளியேறினர்

யாழ்ப்பாணம்,மே12

யாழ்நகரில் ஊரங்குச் சட்டம் தொடர்ந்து நீடிப்பதை அடுத்து யாழ் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்களில் கணிசமான எண்ணிக்கையானோர் நேற்று ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறினர்.

(உ)

## மாணவி வெட்டிக்கொலை

மட்டக்களப்பு,மே12

ஏறாவூர் இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இக்கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் வாழைச்சேனைப் பொலீஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாழைச்சேனைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(உ-5-8)

## அரியாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரையான பகுதிகளையும் கொழும்புத்துறைப் பகுதியையும் தாங்கள் கைப்பற்றிவிட்டதாகக் கூறும் புலிகள் பாதுகாப்புக் கருதி யாழ்.மாநகர சபை பிரதேசத்தில் உள்ள மக்களை பண்டத்தரிப்பு, மானிப்பாய், வட்டுக்கோட்டைப் பகுதிகளுக்குச் செல்லுமாறு கோரியுள்ளனர். ஆனால் இதற்கான காலக்கெடு எதனையும் அவர்கள் விதிக்கவில்லை.

(உ-3-5-8)

## புலிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திலும் அதற்குத் தயாராக இல்லாமல் பிரச்சினைகளை உருவாக்கி வந்தனர்.

மத்தியஸ்தம் தொடர்பாக இந்தியாவின் உத்தியோகபூர்வமாக கோரிக்கைகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. அவ்வாறான கோரிக்கைகள் விடுக்கப்பட்டால் நல்ல முறையில் பதிலளிக்க இலங்கை தயாராக இருக்கிறது- என்றார்.

இந்தப் பிரேரணையை ஆதரித்து ஐ.தே.க.உறுப்பினர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார, கருணாசேன கொடித்துவக்கு ஆகியோர் உரையாற்றினர்.

(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்) (உ-3-5-8)

# ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பி.பி.ஸி அஞ்சலை நிறுத்தியது

கொழும்பு,மே12

பி.பி.ஸியின் தமிழோசை மற்றும் சிங்கள சந்தேசிய நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்வதை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒரேயடியாக நிறுத்தியுள்ளது.

நாட்டின் தற்போதைய யுத்த நிலைமை தொடர்பான செய்தித் தணிக்கை நடைமுறையில் உள்ளதால் -

அந்தச் செய்தித்தணிக்கை தொடர்பான நடைமுறைகளுக்கு உட்பட்டுவராத நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்வது நெருக்கடிகளைத் தருவதால் அது நிறுத்தப்பட்டதாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

(உ-5-8)

# மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வலியுறுத்து

## செஞ்சிலுவைக் குழு கோரிக்கை

கொழும்பு,மே12

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சாதாரண மக்களின் பாதுகாப்பை மதிக்க வேண்டும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இரு தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாண நகரில் மோதல்கள் நடைபெற்றால் அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி தாம் கவலையடைவதாகவும் இக்குழு தெரிவித்துள்ளது.

சாதாரண மக்களின் பாதுகாப்பே தாம் எதிர்நோக்கும் தலையாய பிரச்சினை என்றும் தெரிவித்துள்ள குழு, போர் நடைபெறும் இடங்களிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளது.(உ-5-8)

## இலங்கை விவகாரம்

# நோர்வே பிரதிநிதி இந்தியாவில் பேச்சு

புதுடில்லி,மே12

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தீர்வுக்கான முன் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வே அரசாங்கத்தின் ஆலோசகர் எரிக் சொல்மன் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்த நேற்று இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டார்.

அங்கு அவர் வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங், வெளியுறவுச் செயலர் லலித் மான் சிங் ஆகியோருடன் தனித்தனியே பேச்சுக்கள் நடத்தினார்.

இலங்கைப் பிரச்சினையின் தீர்வு விடயத்தில் இந்தியா ஆற்றக் கூடிய பங்கு குறித்தே அவர் கருத்துக் கேட்டறிந்ததாகக் கூறப்பட்டது.

இந்த விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு இன்றியமையாதது என்றும் -

இந்தியா ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும்-சொல்மன் இந்திய அதிகாரிகளிடம் கோரியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-5-8)

# மக்கள் இடம்பெயர்வு

யர்ழ்ப்பாணம்,மே12

அரியாலை, கொழும்புத்துறை, கல்வியங்காடு ஆகிய பகுதிகளில் இருந்து நேற்றுக்காலை முதல் பல நூற்றுக்கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்தவண்ணம் இருந்தனர்.

இடம்பெயர்ந்த மக்கள் கையில் அகப்பட்ட பொருள்களுடன் சைக்கிள்களிலும், கால்நடையாகவும் வலிகாமம் பகுதியை நோக்கிச் சென்ற வண்ணம் இருந்தனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்நாமகள் வித்தியாலயம் கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் ஆகியவற்றிலும் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ளனர்.


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை நடராசா (சின்ன)

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நெல்லியடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான நடராசா (சின்ன) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சௌந்தரம் ஆகியோரின் அன்பு மகனும் நவமணிதேவியின் அன்புக் கணவரும் சுகந்தன், சுகன்ஜா, கௌசிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சௌந்தரத்தின் பெறாமகனும் காலஞ்சென்ற தியாகராசா, லீலாவதியின் அன்பு மருமகனும் ந.உலகேஸ்வரன் (யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை) அவர்களின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.05.2000) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.உலகேஸ்வரன்
(மைத்துனர்)

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(C/12099)

## திருமதி சிவானந்தம் யோகேஸ்வரி

(சென்ரல் எசன்ஸ் சப்பிளையர்ஸ், கண்டி)

கரம்பனைப் பிறப்பிடமாகவும் கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவானந்தம் யோகேஸ்வரி 10.05.2000 அன்று கண்டியில் காலமானார்.

அன்னார் முத்துச்சாமி - சற்குணம் தம்பதியினரின் அன்பு மகளும் சின்னையா - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவானந்தத்தின் அன்பு மனைவியும் சிவானுஜன், சிவாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுவந்திராதேவி, ரோகினிதேவி, கந்தவேள்(பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ் - கொழும்பு, யாழ்ப்பாணம்), சோமாஸ்கந்தா (பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ் - கொழும்பு, யாழ்ப்பாணம்), சரோஜினிதேவி, தசிகாதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கதிரவேலு முத்துச்சாமி
(தந்தை)

*32,கைலாசபிள்ளையார் கோயில் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(C/12100)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org